திருச்சிராப்பள்ளி, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநரின் செயல்முறைகள்

**முன்னிலை: திரு.ரெ.சித்தார்த்தன்.எம்.இ.,எம்.பி.ஏ.,டி.ஐ.எச்.,**

சுருக்கம்

பணிக்குழு – தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் - தமிழ்நாடு அமைச்சுப் பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் - இளநிலை உதவியாளர் பதவிக்குத் தேர்வு செய்தல் – திருமதி.க.ஜாஸ்மின் பானு – இளநிலை உதவியாளர் - தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர், அலுவலகம் திருச்சிராப்பள்ளி – 14.08.2020 முற்பகல் - பணிவரண்முறை செய்து – ஆணையிடப்பட்டது – தொடர்பாக.

---

அ / 3457 / 2021 நாள்: 20.01.2022

படிக்கவும்:

1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் கடிதம் எண். 2387/PSD-I/2020 நாள் : 28.05.2020
2. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.ஜி3/16386/2020-2 நாள் : 29.07.2020
3. சென்னை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குனர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.ஒ1/12283/2020 நாள் : 04.08.2020
4. சென்னை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குனர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.ஒ1/3973/2020-III நாள் : 25.11.2021

---------

ஆணை:

மேலே 1-ல் படிக்கப்பட்ட கடிதத்தின்படி இளநிலை உதவியாளர் பதவிக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டு, மேலே 2-ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணை மூலம் இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேலே 3-ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணை மூலம் கடலூர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர், அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியமர்வு செய்யப்பட்டு, மேலே 4-ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணை மூலம் பணியிட மாறுதல் செய்யப்பட்டு 01.12.2021 முதல் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.க.ஜாஸ்மின் பானு அவர்கள் தமது பணியில் சேர்ந்த நாள் : 14.08.2020 முற்பகல் தொடக்கம் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs Pending on the files of the Honorable High Court of Madras / Madurai Bench of the Honorable High Court of Madras relating to Combined Civil Services Examination – IV Services for the year 2018-2019 and 2019-2020 recruitment"

இப்பணியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன் படியும், தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் சிறப்பு விதிகளின் கீழான விதி 32-ன் படியும், பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

மேலும் தனியர் தகுதிகாண் பருவ காலத்தில் அரசாணை எண். 130 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் : 22.07.2008-ல் தெரிவிக்கப்பட்டவாறு பணிநியமனம் பெற்ற நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், பவானிசாகர் அடிப்படை பயிற்சி தேர்வில் தேர்ச்சி பெற்றால் மட்டுமே தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்ய இயலும் என்பதால் அத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் உத்திரவிடப்படுகிறது .

பணிவரன்முறை செய்யப்பட்ட விபரம் தனியரது பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது என சான்றளிக்கப்படுகிறது.

02/02/2022

கூடுதல் இயக்குநர்,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
திருச்சிராப்பள்ளி.

1/2/22

**பெறுநர்:**

திருமதி.க.ஜாஸ்மின் பானு,
இளநிலை உதவியாளர்,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார
கூடுதல் இயக்குநர் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி

**நகல் பணிந்தனுப்பப்படுகிறது:**

1. தொழிலாளர் ஆணையர் - சென்னை.
2. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் - சென்னை.